Registered as a News Paper    பக்கங்கள்: 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2023    தை 09    (23-01-1992)    வியாழக்கிழமை    ஓசை: 339

தொண்டர் ஆசிரியர்;

## நிரந்தர நியமன தெரிவு கோட்டங்களுக்கு அறிவிப்பு

பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கற்பிக்கும் ஆசிரியர்களை பயிலுநர் ஆசிரியராக நியமனம் செய்ய விண்ணப்பிக்குமாறு 22-02-90 ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பித்தவர்களில், தகுதியானவர்களைப் பற்றிய விபரங்கள் அனைத்துக் கோட்டக் கல்விப் பிரதிப் பணிப்பாளர்களுக்கும் நேற்றையதினம் யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவர்கள் பற்றிய விபரங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களால் பூர்த்தி செய்யப்பட்டு கோட் (4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் திடீர் தாக்குதல்கள்:

# வவுனியாவில் 14 இராணுவம் பலி

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு புலிகள் தரப்பில் சேதமில்லை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற இரண்டு தாக்குதல்களில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர், பெருமளவு நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. வவுனியா மாவட்டத்திலுள்ள கணேசபுரத்திலும் மாமடுவிலும் இந்த இரண்டு வெவ்வேறான தாக்குதல்கள் இடம்பெற்றன. காவலரண்களை விட்டு வெளிவந்த இராணுவத்தினர்மீதே புலிகள் இந்த திடீர்த் தாக்குதல்களை நடத்தினர். கணேசபுரத்தில் நடந்த தாக்குதலில் 5 இராணுவத்தினரின் சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இவ்விரு தாக்குதல்களிலும் புலிகள் தரப்பில் எவ்வித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கணேசபுரத்தில் 10 படை பலி

(வவுனியா)

நேற்றுக்காலை 10 மணியளவில் கணேசபுரம் காவலரணில் இருந்து வெளியேறித் துப்புரவு வேலைகளிலீடுபட்ட பதினைந்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் திடீர்த்தாக்குதலை நடத்தினர். காவலரணில் இருந்து 250 யார் தொலைவில் இத் தாக்குதல் சம்பவம் நடந்தது.

இத்தாக்குதலில், பத்து இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் காயமடைந்த நிலையில் காவலரணுக்குள் ஓடிவிட்டனர்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஐந்து இராணுவத்தினரின் சடலங்களையும் பெருமளவு ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ஏ. கே. எல், எம். ஜி. - 01
- ★ ரி-56-2 ரகத்துப்பாக்கி - 04
- ★ ரி-56 - பட்மொடல் - 01
- ★ ரி-56-1 ரகத்துப்பாக்கி - 01

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கத்தோலிக்க தூது குழு புலிகள் இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து தற்சமயம் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள கத்தோலிக்க நல்லெண்ண தூதுக் குழுவினர் இன்று விடுதலைப்புலிகளைச் சந்தித்து பேச்சுக்களை நடாத்தவிருக்கின்றனர். பதினொருபேர்கொண்ட இத்தூதுக் குழுவிற்கு வண. பிதா அலெக்சாந்தர் தலைமை வகிப்பார்.

விடுதலைப்புலிகள் சார்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மகேந்திரராசா, செயலாளர் நாயகம்திரு. யோகரெத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்ஆகியோர் இப்பேச்சில்கலந்து கொள்கின்றனர்.

## உண்ணாவிரதம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சிறிலங்கா சிறைகளில் உண்ணாவிரதம் இருந்த நூறு (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் செல்வேன் தொண்டமான் சொல்கிறார்

வட-கிழக்கு பிரச்சினை தொடர்பாக தீர்க்கப்பட வேண்டிய சில தகராறுகள் உள்ளதாகவும் அவை நிவர்த்திக்கப்பட்டதும் தான் யாழ்ப்பாணம் செல்ல உள்ளதாகவும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

அங்குபோய் திரும்பிவரும் போது உறுதியான முடிவுடன் வருவதே தனது நோக்கம் எனவும் அவர் கூறினார். பிரச் (4 ஆம் பக்கம் பார்க்க)

## முதல் தொகுதி அகதிகள்

வடக்கு - கிழக்கு நெருக்கடி காரணமாக தமிழகத்திற்குச் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகளில் முதலாவது பகுதியினர் திருக்கோணமலையிலுள்ள சீனன்குடா துறைமுகத்தில் நேற்றுக்காலை வந்திறங்கினர்.

இவர்களுக்கு என உப்பு (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு திவாகரன், இராசா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வட்ட போட்ட மடு என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த திவாகரன் (கிரான் மட்டக்களப்பு) என்பவரும் ஆ நரவா (4 ஆம் பக்கம் பார்க்க)

## 2 ஆவது தொகுதி 27 இல் புறப்பாடு

சென்னையிலிருந்து இரண்டாவது தொகுதி இலங்கைத் தமிழ் அகதிகள் எதிர்வரும் இருபத்தேழாம் திகதி புறப்படவுள்ளதாகத் அறிவிக்கப்பட்டு உள்ளது. நேற்று இலங்கைத் தமிழ் அகதிகளுடன் தமிழக மறுவாழ்வுத்துறை ஆணையர் ராம்தாஸ் திருக்கோணமலைக்கு வந்துள்ளார்.

# விமானப் படைக்கு பேரிழப்பு

தனர், பெருமளவு நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. வவுனியா மாவட்டத்திலுள்ள கணேசபுரத்திலும் மாமடுவிலும் இந்த இரண்டு வெவ்வேறான தாக்குதல்கள் இடம்பெற்றன. காவலரண்களை விட்டு வெளிவந்த இராணுவத்தினர்மீதே புலிகள் இந்த திடீர்த் தாக்குதல்களை நடத்தினர். கணேசபுரத்தில் நடந்த தாக்குதலில் 5 இராணுவத்தினரின் சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இவ்விரு தாக்குதல்களிலும் புலிகள் தரப்பில் எவ்வித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கணேசபுரத்தில் 10 படை பலி

(வவுனியா)

நேற்றுக்காலை 10 மணியளவில் கணேசபுரம் சரிவலரணில் இருந்து வெளியேறித் துப்புரவு வேலைகளிலீடுபட்ட பதினைந்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் திடீர்த்தாக்குதலை நடத்தினர். காவலரணில் இருந்து 250 யார் தொலைவில் இத்தாக்குதல் சம்பவம் நடந்தது.

இத்தாக்குதலில், பத்து இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் காயமடைந்த நிலையில் காவலரணுக்குள் ஓடிவிட்டனர்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஐந்து இராணுவத்தினரின் சடலங்களையும், பெருமளவு ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஏ. கே. எல், எம். ஜி. - 01
★ ரி-56-2 ரகத்துப்பாக்கி - 04
★ ரி-56 - பட்மொடல் - 01
★ ரி-56-1 ரகத்துப்பாக்கி - 01

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மாமடுவில் 4 படை பலி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் மாமடுவில் சிறிலங்கா இராணுவ காவல் அரணில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் நான்கு படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். படையினரிடம் இருந்து விடுதலைப் புலிகளால் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை 7-00 மணியளவில் மேற்படி காவல் அரணில் இருந்து நான்கு படையினர் வெளியேறி சுமார் 100 யார் தூரம் வரை முன்னேறி வந்தபோது விடுதலைப் புலிகள் தொடுத்த அதிரடித் தாக்குதலில் நான்கு இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

அதேவேளை மேற்படி இராணுவத்தினருக்கு உதவியாக காவல் அரணில் இருந்து பல இராணுவத்தினர் முன்னேற முயற்சித்தனர். இவர்கள்மீதும் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலில் படையினருக்கு ஏற்மட்ட சேதம்பற்றி அறிய முடியவில்லை.

இம்மோதலின்போது விடுதலைப் புலிகளால் பின்வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

★ ஜி3 ஏ3 ரக துப்பாக்கி -1
★ ரி81 ரக துப்பாக்கி -2
★ ரி56 ரக துப்பாக்கி -1

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் சூட்டிற்கு சம்பூரில் 3 தமிழர் பலி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில்மூன்றுதமிழ் மக்கள்உயிரிழந்துள்ளனர். சம்பூரைச்சேர்ந்த இராசலிங்கம் ரவிநேசன், கனகர்சிவமோகன், செல்லையா யோகேஸ்வரன் ஆகியோரே நேற்று முன்தினம் மாலை இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தோராவர்.

## உடுகம்பொல இடத்திற்கு ராஜபக்ஷா தெரிவு

சிறிலங்காவின் பொலிஸ் விசேட நடவடிக்கை பணியகத்தின் வி. எஸ். ஓவின் புதிய தலைவராக பிரதி பொலிஸ்மா அதிபர் ராஜபக்ஷா தேர்ந்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதி யுத்தநிலை மதிப்பீடு உயர்மட்ட இராணுவக்குழு விஜயம்

(கொழும்பு)

வடமாகாணத்திலுள்ள முகாம்களில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்காப் பாதுகாப்புப் படைகளின் யுத்த நடவடிக்கைகளைப் பற்றிய மதிப்பீட்டைச் செய்வதற்காக உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் ஒன்று கடந்த திங்களன்று வடபகுதிக்கு விஜயம் செய்தது.

சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணாவின் பணிப்புரையின் பேரில் யாழ்ப்பாணம் வந்த இந்தக் குழுவில் நான்கு பிரிகேடியர்களும் இருந்தார்கள்என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தக் குழு மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகங்கள் மற்றும் இராணுவ ஸ்தலங்களையும் பார்வையிட்டது.

முப்படைகளினதும் தேவைகள், படைகளின் யுத்த நடவடிக்கைகள் மற்றும் முக்கிய விடயங்கள் குறித்து இக்குழு முகாம்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளுடனும் வடபகுதி பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ, யாழ்ப்பாணப் படைப் பிரிவுத் தளபதி பிரிகேடியர் விஜயா விமலரெட்ணா ஆகியோருடன் ஆலோசனை கலந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

வடபகுதிக் கடற்படைக் கட்டுப்பாட்டுத் தலைமையகமான காரைநகர் கடற்படைத் தளத்துக்கும் இந்தக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சி தலைமை மூவரிடம் பகிர்ந்தளிப்பு

(கொழும்பு)

மூன்று மாதகாலத்திற்கு அரசியலில்இருந்து பூரணமாக விலகியிருக்க இருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா கட்சியின் தலைமையை மூவரிடம் பகிர்ந்தளிக்கவுள்ளார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் பதில் தலைவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நல்லெண்ண தூதுக் குழுவினர் இன்று விடுதலைப்புலிகளைச் சந்தித்து பேச்சுக்களை நடாத்தவிருக்கின்றனர். பதினொரு பேர்கொண்ட இத்தூதுக் குழுவிற்கு வண. பிதா அலெக்சாந்தர் தலைமை வகிப்பார்.

விடுதலைப்புலிகள் சார்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு.

## உண்ணாவிரதம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சிறிலங்கா சிறைகளில் உண்ணாவிரதம் இருந்த நூறு

(4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் செல்வேன் தொண்டமான் சொல்கிறார்

வட-கிழக்கு பிரச்சினை தொடர்பாக தீர்க்கப்பட வேண்டிய சில தகராறுகள் உள்ளதாகவும் அவை நிவர்த்திக்கப்பட்டதும் தான் யாழ்ப்பாணம் செல்ல உள்ளதாகவும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

அங்குபோய் திரும்பிவரும் போது உறுதியான முடிவுடன் வருவதே தனது நோக்கம் எனவும் அவர் கூறினார். பிரச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முதல் தொகுதி அகதிகள்

வடக்கு - கிழக்கு நெருக்கடி காரணமாக தமிழகத்திற்குச் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகளில் முதலாவது பகுதியினர் திருக்கோணமலையிலுள்ள சீனன்குடா துறைமுகத்தில் நேற்றுக்காலை வந்திறங்கினர்.

இவர்களுக்கு என உப்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# விமானப் படைக்கு பேரிழப்பு

# பெரும் ஆயுதக் கூதம் நாசம்

## திருமலையை அதிர வைத்த குண்டு வெடிப்பு

(திருமலை)

சீனன்குடா விமானப்படை தளத்தில் ஏற்பட்ட பாரிய வெடிவிபத்தினால் சிறிலங்கா விமாப்படைக்குப் பேரிழப்பு ஏற்பட்டதாக செய்திகள்தெரிவிக்கின்றன. உயிருக்கும், உடைமைக்கும் பெரும் அழிவுகள் ஏற்பட்டன. இவற்றிற்கான பெறுமதி பல கோடி ரூபா எனச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விமானத்தளத்தில் அண்மையில் பெருமளவு வெடிப்பொருள்கள் சேகரித்து வைக்கப்பட்டதாக வெடி விபத்திற்கு முதல் நாள் வெளிவந்த [திங்கட்கிழமை] ஐலண்ட் பத்திரிகை தனது தலைப்புச் செய்தியில் தெரிவித்திருந்தது. இந்நிலையில் ஏற்பட்ட வெடிவிபத்தினால் பெருமளவு வெடிப்பொருள்கள் சேதமாகியதாகத் தெரியவருகிறது.

வெடிவிபத்து ஏற்பட்டஆயுதக்கிடங்கில் ரவைகள் மோட்டர் ஷெல்கள், விமானக் குண்டுகள் உட்பட பலரக வெடிப்பொருள்கள் இருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் வெடி விபத்தின்போது சுமார் முப்பது நிமிடங்கள் திருமலைநகரையே அதிரவைக்கும் வண்ணம் வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும், ஒரே புகைமண்டலமாக வானம் காட்சியளித்ததாகவும் நேரில் கேட்டவர்கள், கண்டவர்கள் தெரிவித்தார்கள்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பீப்பா குண்டுகளே விபத்திற்கு காரணமாம்

(திருமலை)

குண்டுகள் தயாரிக்கப்படும் இடத்திலேயே முதலாவது வெடிவிபத்து ஏற்பட்டதாகவும் அதைத் தொடர்ந்தே வெடிபொருள் களஞ்சியத்தில் வெடிவிபத்து ஏற்பட்டதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறிலங்கா விமானப்படை பயன்படுத்தும் பீப்பாக் குண்டுகளே இங்கு தயாரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

## சடலங்களைக்காணவில்லை; 100 பேர் படுகாயம்

சீனன் குடா விமானப் படைத்தள குண்டுவெடிப்பில் சிக்கியபதினாறுக்கு மேற்பட்ட விமானப்படையினரின் சடலங்களைக்காணவில்லை என ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சடலங்கள் வெடிவிபத்தில் சிக்கி முற்றாக அழிந்து போயிருக்கலாம்எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை, இன்னும் சடலங்கள் மீட்கப்படாமல் இடிபாடுகளுக்குள்இருக்கலாம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 20 கட்டடங்கள் தரை மட்டம் விமானங்கள் சேதம்

விமானப்படைத் தளக் குண்டு வெடிப்பில், இத்தளத்தில் இருந்த பல கட்டடங்கள் தரைமட்டமாகியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இருபதிற்கும் மேற்பட்ட கட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை வந்த அகதிகள் பாதுகாப்புக் குறித்து அச்சம்

திருக்கோணமலைக்கு வந்திருக்கும் தமிழ் அகதிகள் தாம் தாக்கப்படலாம் என அச்சம் தெரிவித்திருப்பதாகவும் போர் நடக்கும் சூழ்நிலையில் திருப்பி அனுப்பப்பட்டமை குறித்து கண்டனம் தெரிவித்திருப்பதாகவும் கொழும்பு முகவரை மேற்கோள்காட்டி பி. பி. சி. அறிவித்தது.

இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்ட செயல் குறித்து பல்வேறு வாதப் பிரதிவாதங்களும், விமர்சனக் கணைகளும் எழுந்திருப்பதாக பி. பி. சி. மேலும் கூறியது.

# பிரான்சில் விமான விபத்து; 87பேர் பலி; 9பேர் தப்பினர்

[பரிஸ்]

பிரான்சில் 96 பயணிகளுடன் சென்ற விமானம் ஒன்று விழுந்து நொருங்கியதில் 84 பேர் உயிர் இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏ 320 ரக ஏயர்பஸ் விமானமே இவ்வாறு நொருங்கியது என்றும், இந்த விமானத்தின் சிதைவுகள் ஸ்ராஸ்பேகின் தென் மேற்கே ஐம்பது கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மலைப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டது என்றும், இந்த விமானத்திலிருந்து பன்னிரண்டுபேர் மட்டுமே தப்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


க. பொ. த. சாதாரண தரம்

(ஆண்டு 11)

* பகல் முழுநேர வகுப்புகள்
* சனி, ஞாயிறு வகுப்புகள்
* மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்

25-1-92 சனி காலை 7-45 மணி

யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

இதைவிடத் தெரிவு .......

வேறேதும் இல்லை! (சி/3821)



இதோ!

மக்களுக்கோர் நற்செய்தி!

சகல அச்சு வேலைகளுக்கும்

பிரசித்தி பெற்ற நிறுவனம்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்

* அழகு மிளிரும் வர்ணவேலைகளா
* ஆங்கிலம் தமிழ் புத்தக வேலைகளா

தங்கள் தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்ய

நாடுங்கள்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்

New Era Publications

267, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இ/3


## அரசாங்க அறிவித்தல்

சுகாதார சேவைகள் பிராந்திய திணைக்களம்,

யாழ்ப்பாணம்.

### 1992 ஆம் ஆண்டிற்கான

### வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

யாழ்டபாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள சுகாதார நிறுவனங்களுக்கு (வைத்தியசாலைகள் உட்பட)தேவையான பின்வரும்பொருள்களைவழங்கக்கூடியவர்களிடமிருந்து மறுபந்தியில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காகிதாதிகள்
2. பாவனைப் பொருள்கள் (ஈர்க்கு விளக்குமாறு, தும்புத்தடி, சவர்க்காரவகைகள்)
3. வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள்
4. மரத்தளபாடங்கள்
5. உருக்குத் தளபாடங்கள்
6. பிளாஸ்டிக் பொருள்கள் (வாளி, குப்பைக்கூடை, குப்பை வாளி முதலியன)
7. இரும்பு, பித்தளை, சன இரும்புப் பொருள்கள், ஆமைப் பூட்டுக்கள், வாளி வகைகள், குப்பைவாளி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி, கோடரி முதலியன.
8. மின்சார உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்
9. வைத்தியசாலை உபகரணங்கள் (சேலைன் ஸ்ராண்ட், கட்டில்கள், சிறுகட்டில்கள்,சத்திரசிகிச்சை உபகரண நிலைகள்)
10. கட்டடத் திருத்தத்திற்கு அவசியமான பொருள்கள்
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டயர், டியூப் உட்பட)

### பதிவு செய்யத் தகைமையானோர்

1. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
2. கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்கள்
3. பதிவு செய்யப்பட்ட வேறு கூட்டுறவுச்சங்கங்கள்
4. கிராமோதைய சபைகள்
5. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
6, சன சமூக நிலையங்கள்
7. வருமானவரிசெலுத்தும் பிரசித்திபெற்றநிறுவனங்கள்

### விண்ணப்பித்தல்

மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவத்தைக் கீழ்க்காணும் விலாசத்திலுள்ள எனது பணிமனையில் ரூ 25/- பதிவுக்கட்டணமாகச் செலுத்திப் பெற்று 06 02.1992 வியாழக்கிழமை காலை 11,00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள்பதிவுத்தபாலிலோ, அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

1992 ஆம் அண்டிற்கு தேவையான பொருள்கள் கொள்வனவு செய்யப்படும் பொழுது, கேள்விகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மட்டும் கோரப்படும்.

வைத்திய கலாநிதி ந. கனகசபை

சு. சே. பி. பணிப்பாளர்,

யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்பணிமனை,

59, விக்டோரியா வீதி,

யாழ்ப்பாணம்.

10.01.1992 (சி/3804)

## வரி விளம்பரம்

### தேவை

சிறுவர் பாடசாலைக்குரிய மேசை, கதிரை மற்றும் உபகரணங்கள் தொடர்பு: செயலாளர், ஆலய பரிபாலன சபை, அருள் மிகு வாலாம்பிகா சமேத விஸ்வலிங்க வைத்தீஸ்வர சுவாமி திருக்கோயில் கே. கே. எஸ். வீதி, திருவண்ணை நகர், யாழ்ப்பாணம்.

(2132)

## ஜெனரேற்றர் மூலம் மின்சாரம்

கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலைகளுக்கு இரண்டு ஜெனரேட்டர்கள் மூலம்மின்சாரம்வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை கிளிநொச்சி வர்த்தகர் சங்கம் வழங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பருத்தித்துறை துறைமுகம் கடற்கொந்தளிப்பால் சேதம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை துறைமுக இறங்குதுறை அண்மைக் காலத்தில் நிலவிய கடல் கொந்தளிப்பு மற்றும் கடலரிப்பினால் சேதம் அடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கப்பலிலிருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் தாமதமடைந்து வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.


MANAGEMENT IN COMPUTER

* Basic
* Lotus 1, 2, 3
* dBase III+ & Wordstar ஆகிய பயிற்சிகளை உள்ளடக்கியது.
* தொழில் புரிவோருக்கு உகந்தது
* விசேட செய்முறைப் பயிற்சிகளை உள்ளடக்கியது

ஆரம்பம்: 25-01-1992 (சனிக்கிழமை)

இவற்றுடன்

* BASIC
* LOTUS 1-2-3
* dBASE III+
* WORD STAR

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 27-01-1992

விபரங்களுக்கு:

North Ceylon Technical Institute

14 St. Peter's Lane — JAFFNA (சி/3833)


### புத்தகங்கள் அச்சிடுதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் புத்தகங்களை அச்சிட்டுவழங்குவதற்குஅனுபவமிக்க அச்சகங்களிடமிருந்து பொறியிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

01. JAFFNA TAMIL -500 பிரதிகள் 1/8 அளவில்

02. JAFFNA KINGDOM - 500 பிரதி

## நினைவு கூருகின்றோம்

1992 - 01 - 23



கப்டன்

நேசன்

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா காவல்

இதோ!

மக்களுக்கோர் நற்செய்தி!

சகல அச்சு வேலைகளுக்கும்
பிரசித்தி பெற்ற நிறுவனம்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்

❋ அழகு மிளிரும் வர்ணவேலைகளா
❋ ஆங்கிலம் தமிழ் புத்தக வேலைகளா
தங்கள் தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்ய

நாடுங்கள்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்
New Era Publications

267, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இ/3

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
01-11-1962

வீரச்சாவு
23-01-1987

## கப்டன் நேசன்

(இராசதுரை - ஜெயச்சந்திரன்)
செல்வநாயகபுரம் - திருக்கோணமலை

வேங்கையாய் எழுந்து நீ
வீறு கொண்டு பாய்ந்தும்மே
சிங்களத்தை எதிர்த்திங்கு
வெஞ்சமர் புரிந்திட்டாய்
பாசறையில் வைத்து நீ
மகளிர் படைப் பிரிவையே
பயிற்சிகள் பல கொடுத்து
கட்டி நீ வளர்த்திட்டாய்
சாதனைகள் பல புரிந்த- ''நேசனே!''
சாகவில்லை நீ யென்றும்
வாழ்கிறாய் எம்முடனே ஆதலால்
ஐந்தாண்டில் இன்று உனை
நினைவு கூருகின்றோம்

அண்ணன் குடும்பத்தினர்

புதிய வீடமைப்புத்திட்டம்
வீட்டு இல. C. 82.
நாவற்குழி

(சி/3829)

மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவத்தைக் கீழ்க் காணும் விலாசத்திலுள்ள எனது பணிமனையில் ரூ 25/- பதிவுக்கட்டணமாகச் செலுத்திப் பெற்று 06 02.1992 வியாழக்கிழமை காலை 11,00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள்பதிவுத்தபாலிலோ, அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

1992 ஆம் ஆண்டிற்கு தேவையான பொருள்கள் கொள்வனவு செய்யப்படும் பொழுது, கேள்விகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மட்டும் கோரப்படும்.

வைத்திய கலாநிதி ந. கனகசபை
சு. சே. பி. பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்பணிமனை,
59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

10.01.1992 (சி/3804)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. கு. தாமலிங்கம

(இறைவரி உத்தியோகத்தர்)

வல்லவன் படைப்பு
08- 09- 1937

வஞ்சகன் அழிப்பு
25- 01- 1989

திதி 23. 01. 1992

ஆண்டுகள் மூன்று ஆனதையா
ஆண்டவன் அடி நீர் சென்று
ஆனாலும் ஆறிடுமோ உம் பிரிவு
ஆண்டுகள் ஆயிரம் சென்றாலும்
ஆறாதையா உம் நினைவு
நித்தம் நித்தம் நின் நினைவு வந்து
நெஞ்சை வாட்டுதையா!

இங்ஙனம்
உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மகன், மகள்.

கட்டுடை,
மானிப்பாய்.

2108

## புத்தகங்கள் அச்சிடுதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் புத்தகங்களை அச்சிட்டுவழங்குவதற்குஅனுபவமிக்க அச்சகங்களிடமிருந்து பொறியிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

01. JAFFNA TAMIL -500 பிரதிகள் 1/8 அளவில்

02. JAFFNA KINGDOM - 500 பிரதிகள் 1/8 அளவில் - 500 பக்கங்களின் அளவில்

கூறு விலைகள், பல்கலைக்கழகத்தால் காகிதாதிகள் வழங்கப்பட்டால் எவ்வளவு, காகிதாகிகள் வழங்கப்படாவிட்டால் எவ்வளவு என்பதைத் தனித்தனியாகக் கொண்டதாக இருக்க வேண்டும், அத்துடன் காகிதாதிகள் அச்சகங்களால் வழங்கப்படுவதற்கான கூறுவிலையுடன் மாதிரி காகிதாதியும்இணைக்கப்பட வேண்டும்.

இதுதொடர்பான மேலதிக விபரங்களையும் புத்தகங்களின் உள்ளடக்கத்தையும் அலுவலக நேரங்களில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ கல்விக்கிளையில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும், கூறு விலையுடன் கட்டளை வழங்கப்பட்டு எவ்வளவு காலத்துள் அச்சடித்து வழங்க முடியும் என்பதையும் தெரிவிக்கப்படவேண்டும். கூறுவிலைகள் பொறியிடப்பட்டு கடிதஉறையின் இடது புறமேல்மூலையில் 'புத்தகங்கள் அச்சடித்தல்'' என குறித்து, நிதியாளர், யா/பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 31-01-1992 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ கையளிக்கப்பட வேண்டும். கூறுவிலைகள் அதே தினம்காலை 10.30 மணிக்கு திறக்கப்படும்.

பதிவாளர்
யாழ் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
21-01-92.

(சி/3832)

# 1992 - 01 - 23



## கப்டன் நேசன்

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா காவல் துறையினரால் கைதாகி மட்டக்களப்பு காவல் நிலையத்தில் வைத்து கொலைசெய்யப்பட்ட

★ **தேவன்** [ரி ஜெயதவன் - செங்கலடி, மட்டக்களப்பு]

சுன்னாகம், தெல்லிப்பளை, கட்டுவன், பெரியவிளான் பகுதிகளில் சிறிலங்காப் படையினரின் விமானத் தாக்குதலிலும், எறிகணைத் தாக்குதலிலும் கொல்லப்பட்ட - 17 பொதுமக்கள்

1987ஆம் ஆண்டு தெகிவத்தையில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் நேசன்** [ இராசதுரைஜெயச்சந்திரன்- செல்வநாயகபுரம், திருக்கோணமலை ]

1988 ஆம் ஆண்டு இரணைமடுவில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**அல்பேட்** [ முத்தையா ரஞ்சநாதன் - இணுவில்வீதி, மானிப்பாய் ]

இளவாலை முள்ளானைப் பகுதியில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் பல்லவன்** [சாந்தமூர்த்தி குகமணி - ஆத்தியடி, பருத்தித்துறை ]

இதே பகுதியில் இந்தியப் படையினரின் முற்றுகையின் போது அடித்துக் கொல்லப்பட்ட-

**சந்தோசம்** [ அளவெட்டி ]

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பு ஏரன்ஸ் ஒழுங்கையில் சிறிலங்காப் படையினரின் சுற்றி வளைப்பின் போது காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**தயான்** [இராசமாணிக்கம் ஜெயச்சந்திரன் - இருதயபுரம் கிழக்கு, மட்டக்களப்பு ]

கட்டுவனில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவெய்திய-

**மேஜர் தாரணி** [ மதிவதனி சுப்பிரமணியம் ] அத்தாய், பூநகரி ]

இதே ஆண்டு சிறிலங்காப்படையினரின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**குமணன்** [ முத்துக்குமார் அட்டாளைச்சேனை ]

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் தேவன் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/3830)

### சிந்தனைக்கு

தன் சொந்த அனுபவத்தால் கற்பதைத் தவிர, மனிதன் வேறு அறிவு பெறுவதில்லை.
- வைலென்ட்.

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 23-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

## வேள்விக் கடாக்களாக இல. தமிழ் அகதிகள்

தமிழகத்தில் தங்கியிருந்த இலங்கைத்தமிழ் அகதிகளில் முதல் கொகுதியினர் சென்னையில் இருந்து திருமலை வந்து சேர்ந்தனர். அவர்களை வழியனுப்பி வைப்பதில் இந்தியாவும், அவர்களை வரவேற்பதில் சிறிலங்காவும் பெரும் 'ஆர்வம்' காட்டுவதாகச்செய்திகள் தெரிவிக்கின்றன.

அகதிகளை 'அன்புடன்' வழியனுப்பிவைக்கும் இந்தியா அகதிகளுக்கான போக்குவரத்துச் செலவைப் பொறுப்பேற்று எம். வி. அக்பர் என்னும் தமது கப்பலில் அனுப்பி வைத்ததோடு, அவர்களுக்குப் பாதுகாப்பாக 'கங்காதேவி' என்னும் கடற்படைக் கப்பலையும், முப்பது கொமாண்டோப்படை வீரர்களையும் அனுப்பி வைத்துள்ளது. மேலும் அகதிகளுடன் இந்திய மத்திய அரசினதும்தமிழ்நாட்டுஅரசினதும் அதிகாரிகள் சிலரும், கப்பலில் திருமலை வந்துள்ளனர். இவர்கள் திருமலை வரும் இலங்கைத்தமிழ் அகதிகளை வரவேற்பதற்கும், அவர்களைத் தங்கவைத்து பராமரிப்பதற்கும் இலங்கையில் செய்யப்படும் ஏற்பாடுகளை கவனிப்பதற்காக வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் அகதிகள் விடயத்தில் இந்தியா மேற்கொள்ளும், இப் பரோபகார நடவடிக்கையானது வேள்விக்கு வெட்டப்படவுள்ள ஆட்டுக்கடாவிற்கு நடை பெறும் கவனிப்புப் போன்றதாகும். வேள்விக்கு வெட்டப்படும் கடாவிற்கு உணவை ஊட்டி ஊட்டி வளர்ப்பது போலவும், இடையில் அது இறந்து விடாமலோ அன்றி நோய்வாய்ப்படாமலோ பாதுகாப்பது போலவும் உள்ளது இந்தியாவின் நடவடிக்கையாகும்.

சிறிலங்கா அரசாங்கமோ அதற்கும் மேலே ஒருபடி சென்று இலங்கை திரும்பும் அகதிகளை வரவேற்பதற்கு திருமலையில் பல ஏற்பாடுகளை செய்துள்ளதோடு பல சலுகைகள் வழங்குவது போல் பெரும் அறிவிப்புகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது. திரும்பி வரும் அரசஊழியருக்கு முற்பணமாக 1000 ரூபா வழங்கப்படும். அவர்கள் தமது வாழ்விடங்களுக்குச் சென்றதும் அவர்களது பழைய உத்தியோகங்கள் வழங்கப்படும். அழிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க நிதிஉதவி வழங்கப்படும். இரண்டு மாதத்திற்குத் தேவையான உணவுப்பொருள் வழங்கப்படும் போன்ற பல வேறு அறிவிப்புக்களைச் செய்கின்றது.

இந்தியாவின் பரோபகாரம், 'வேள்விக்கடாக்களை' பராமரிப்பதாக இருப்பின் சிறிலங்காவின் அறிவிப்புக்களோ, அக்கடாவிற்கு இறுதிநேரத்தில் வழங்கப்படும் வரவேற்பும் மரியாதையும் போன்றதாகவுள்ளது. வேள்விக்கடாவை மாலைபோட்டு, மேளம் அடித்து கோயிலுக்கு அழைத்துவந்து கொலைக்களத்தில் நிறுத்துவது போல் உள்ளது. திருமலையில் இலங்கை திரும்பும் அகதிகளை வரவேற்பதற்கு நடைபெறும் ஏற்

# தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்

சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு விடுதலைப்புலிகள் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. போர் நிறுத்தத்தையும் முன்நிபந்தனையாக வரிக்கவில்லை. ஆயினும் சமாதானப் பேச்சுக்கள் அழுத்தங்கள், நெருக்குதல்களின்கீழ் நடைபெறுவதை புலிகள்இயக்கம் விரும்பவில்லை. ஆகவே தான் இராணுவ, பொருளாதார அழுத்தங்கள் நீங்கிய ஒரு சுமுக சூழ்நிலையை நாம் வலியுறுத்தினோம்.

ஆனால் பிரேமதாசா அரசு போருக்கு ஓய்வுகொடுத்து ஒரு அமைதி நிலையை ஏற்படுத்துவதையோ, எமது மக்கள் மீது திணிக்கப்பட்ட பொருளாதாரப் பழுவை நீக்குவதையோ விரும்பவில்லை. இவ்வித நெருக்குதல்கள் மக்களின் மனவுறுதியைஉடைத்து, போராட்ட உணர்வை மழுங்கடித்து, பணிந்துபோகும் அல்லது விட்டுக்கொடுக்கும் ஒருமனப்பான்மையை உருவாக்கும் என எண்ணி பிரேமதாசா அரசு அசுந்தைப் போக்கை கடைப்பிடித்தது. எனவே, பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னராக ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்க அரசாங்கம் இலகுவில் இணங்காது என்பது எமக்குத் தெரியாதது அல்ல. எனவேதான் போர் நிறுத்தத்தை முன்நிபந்தனையாக விதிக்காமல், ஒரு சுமுக சூழலில் பேச்சுக்கள் நடைபெறுவதின் தேவையையும், முக்கியத்துவத்தையும் நாம் திரு. தொண்டமானுக்கு வலியுறுத்தினோம். எமது கோரிக்கையில் அடங்கியுள்ள மனிதாபிமான தன்மையையும் நியாயத்தையும் திரு. தொண்டமான் கருத்தில் எடுத்துக் கொண்டாலும் அரச தரப்பிலிருந்து, குறிப்பாக இராணுவத் தலைமையிலிருந்து ஒரு சாதகமான பதிலை அவர் பெற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே, சுமுக சூழலை உருவாக்கும் விசயத்தில் திரு. தொண்டமான் ஒரு நொண்டிச் சாக்கு தலை முன்வைத்து சறுக்க முயன்றார். 11. 11. 1991இல் திரு மகேந்திரராசாவுக்கு எழுதிய பதில் கடிதத்தில்;

''பேச்சு வார்த்தைக்குரிய நல்லதோர் சூழ்நிலை விரைவில் உருவாகும் என ஊகிப்பதற்கு இடமுண்டு. இராணுவ பொருளாதார நெருக்கடியற்ற சுமுக நிலையின் அத்தியாவசியத்தை வலியுறுத்தினீர்கள். நான் அதைக் கருத்தில் கொண்டுள்ளேன். ஆனால் முன்னர் 14 மாதங்களாக யுத்தமற்ற சூழ்நிலை இருந்த போதும், அரசாங்கம் எழுப்ப விரும்ப வில்லை. அதனால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு வட கிழக்கிலும், ஜே. வி. பி. யின் அட்டகாசம் தெற்கிலுமாக ஒரு பெரிய நெருக்கடிக்குள் சிக்கியிருந்த பிரேமதாசா விடுதலைப் புலிகளை பேச்சுக்கு வருமாறு மன்றாடினார். அப்பொழுது அவருக்கு நேசக்கரத்தை நீட்டியது புலிகள் தான். கொழும்பில் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் புலிகள் இயக்கத்துடன்



போர் ஓய்வு வேண்டுமென இரந்து கேட்டதும் பிரேமதாசா அரசுதான். புலிகள் இயக்கம் நேர்மையுடனும் நல்லெண்ணத்துடனும் நடந்து கொண்டது.

14 மாதங்களாகத் தொடர்ந்து இழுபட்ட இந்த பேச்சுக்களின் போது பிரேமதாசா அரசு எந்தவொரு உருப்படியான தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. ஒருபுறம் புலிகளுடன் பேசிக் கொண்டு மறுபுறம் சர்வ கட்சி மாநாட்டை அரங்கேற்றி காலத்தைக் கடத்தமுயன்றது. கொழும்பில் புலிகளோடுநடத்திய பேச்சுக்களில் இனப் பிரச்சினையின் அடிப்படைகள் எதுவும் தொடப்படவில்லை. பிரேமதாசாவுடன் பேசி ஒரு உருப்படியான, நிரந்தரமான தீர்வு எதையும் பெற்றுக் கொள்ள முடியாது என உணர்ந்து கொண்ட நாம், ஒரு இடைக்காலத்தீர்வை விரும்பினோம். அந்த வேளையில் நாம்அரசாங்கத்திடம் இரண்டு கோரிக்கைகளைமட்டும் விடுத்திருந்தோம். ஒன்று, மாகாண சபையைக் கலைத்து விட்டு புதிதாகத் தேர்தலை நடத்துவது, இரண்டாவது, அரசியல் யாப்பின் ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்குவது. இந்த யையும் தர்மத்தையும் எதிர் பார்க்க முடியாது.

திரு. தொண்டமானின் சீண்டலுக்கு நாம் விளக்கமளித்து வீண் விதண்டா வாதங்களுக்குள் இறங்க விரும்பமில்லை, கடிதப்பரிமாற்றங்களில் சர்ச்சைகளை எழுப்பாமல் திரு, தொண்டமானை நேரில் சந்திக்கும் போது கதைக்கலாமென எண்ணினோம்.

### பிரகடனம் செய்யாத போர் நிறுத்தம்

போர் நிறுத்தம் சம்பந்தமாக திரு. தொண்டமான் இந்தக் கடிதத்தில் புலிகளுக்கு ஒரு யோசனையைத் தெரிவித்தார். பகிரங்கமாக பிரகடனம் செய்யாமல் புலிகள் இயக்கம் போர் நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ள வேண்டும். சமாதான நிலமையை உருவாக்கும் பொறுப்பை நாம் மேற்காள்வோமானால் அரசாங்கத்துடன் தான் பேசி அவர்களையும் சமாதான முயற்சிக்கு தூண்டலாம் என ஆலோசனை கூறியிருந்தார்.

''பிரகடனப்படுத்தப்படாத சண்டையற்ற நிலை நிரந்தரப் போர் நிறுத்தத்திற்கு வழிவகுக்கும் என்பது எனது கருத்து. எனவே, ஒரு பக்கத்தில் தொடங்கும் சமாதான முயற்சி. மறு பக்கத்தில் நல்லெண்

3

ணத்தை வளர்ப்பதோடு பேச்சு வார்த்தைக்குச் சாதகமான நம்பிக்கை நிலைமையையும்ஏற்படுத்தலாம். அடுத்து வரும் காலத்தில் சமாதான நிலைமையை உருவாக்கும் பொறுப்பை நீங்கள் கூடியளவுக்கு மேற்கொண்டால் இது போற்றத்தக்க செயலாகும். இப்படி நீங்கள் நடந்து வைத்துவிட்டு கைகட்டி நிற்பதா? அப்படியான யுத்த நிறுத்தம் தற்கொலைக்கு ஒப்பானது அல்லவா? முதலில், ஆக்கிரமிப்பு போரை நடத்துபவன் அல்லவா சண்டையை நிறுத்தவேண்டும். அல்லது இரு தரப்பும் இணங்கி, ஒரே சமயத்தில் போரை நிறுத்திக்கொள்ள வேண்டும். அதைவிடுத்து தற்காப்பு யுத்தத்தில் ஈடுபட்டு நிற்பவர்களை ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தம் செய்யச் சொல்வது



யுத்த தர்மம் ஆகாது.

ஏற்கனவே, சென்ற புத்தாண்டில் சில வெளிநாட்டு அரசுகளின் கோரிக்கையின் பேரில் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் அறிவித்து, சமாதானப் பேச்சுக்கு இணங்கிய போது அரசாங்கம் அதனை நிராகரிக்கவில்லையா? ஆயுதப் படைகள் பகிரங்கமாகவே யுத்தத்தை மீறவில்லையா? அப்பொழுது யுத்த நிறுத்தத்தை நாம் பகிரங்கமாக பிரகடனம் செய்தோம். அதனை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. சமாதானத்திற்கு நாம் விடுத்த சமிக்ஞையை பலவீனத்தின் அறிகுறியாகவே அரசாங்கம் அப்பொழுது தப்புக்கணக்கு போட்டது

திரு தொண்டமான் தெரிவித்த 'பிரகடனப்படுத்தப் படாத போர்நிறுத்தம்' நடைமுறைப்படுத்த முடியாத காரியம். இராணுவ ரீதியில், போர்த்தந்திர அடிப்படையில் இது எமக்கு அனுகூலமானதும் அல்ல, அத்துடன் திரு. தொண்டமானின் யோச பகிரங்கமாக பிரகடனம் செய்யப்படவேண்டும் என்பது பிரபாகரனின் நிலைப்பாடு.

திரு. தொண்டமானுக்கு எமது இயக்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி பதில் எழுதினோம்.

2-12-1991ல் திரு. மகேந்திரராசா அமைச்சர் தொண்டமானுக்கு எழுதிய கடிதத்தில்,

''பிரகடனப்படுத்தப் படாத சண்டையற்ற நிலை நிரந்தரப் போர் நிறுத்தத்திற்கு வழிவகுக்கும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளீர்கள். கொள்கையளவில் இந்தக் கருத்தை நாம் வரவேற்கிறோம் ஆயினும் நடைமுறையில் இதில் பல சிக்கல்கள் உள்ளன. தமிழ் மண்ணில் தொடர்ந்து இராணுவம் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பொழுது ஒருதலைப் பட்சமாக சண்டையை நிறுத்திக் கொள்வது சிரமமானது அல்லவா? அத்தோடு புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாக பல வீனப்படுத்த வேண்டுமென அரச தரப்பில் பகிரங்க அறிவித்தல்கள் விடுக்கப்படுவதும் சமாதான சூழலுக்கு பாதகமாக அமையும்.

சமாதானநல்லெண்ண சூழ்நிலை ஏற்படுவதற்கு நாம் எம்மாலான முயற்சிகளை மேற்கொள்வோம். ஆயினும் அதே வேளை அரச ஆயுதப் படைகளும் இம்முயற்சிக்கு ஒத்துழைப்பு அளித்து பொறுப்புடன் நடந்து கொள்வது சாலச் சிறந்தது. இராணுவ, பொருளாதார அழுத்தங்களைத் தளர்த்தி, சமாதான நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்கி, தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை உண்டுபண்ணும் தார்மீகப் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்திருக்கிறது. புலிகள் இயக்கத்திற்கு நிர்ப்பந்தம் போடுவதாக எண்

அன்ரன் பாலசிங்கம்

வெட்டப்படவுள்ள ஆட்டுக்கடாவிற்கு நடைபெறும் கவனிப்புப் போன்றதாகும். வேள்விக்கு வெட்டப்படும் கடாவிற்கு உணவை ஊட்டி ஊட்டி வளர்ப்பது போலவும், இடையில் அது இறந்து விடாமலோ அன்றி நோய்வாய்ப்படாமலோ பாதுகாப்பது போலவும் உள்ளது இந்தியாவின் நடவடிக்கையாகும்.

சிறிலங்கா அரசாங்கமோ அதற்கும் மேலே ஒருபடி சென்று இலங்கை திரும்பும் அகதிகளை வரவேற்பதற்குத் திருமலையில் பல ஏற்பாடுகளைச் செய்துள்ளதோடு பல சலுகைகள் வழங்குவது போல் பெரும் அறிவிப்புக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது. திரும்பி வரும் அரசஊழியருக்கு முற்பணமாக 1000 ரூபா வழங்கப்படும். அவர்கள் தமது வாழ்விடங்களுக்குச் சென்றதும் அவர்களது பழைய உத்தியோகங்கள் வழங்கப்படும். அழிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க நிதிஉதவி வழங்கப்படும். இரண்டு மாதத்திற்குத் தேவையான உணவுப்பொருள் வழங்கப்படும் போன்ற பல்வேறு அறிவிப்புக்களைச் செய்கின்றது.

இந்தியாவின் பரோபகாரம், 'வேள்விக்கடாக்களை' பராமரிப்பதாக இருப்பின் சிறிலங்காவின் அறிவிப்புக்களோ, அக்கடாவிற்கு இறுதிநேரத்தில் வழங்கப்படும் வரவேற்பும் மரியாதையும் போன்றதாகவுள்ளது. வேள்விக்கடாவை மாலைபோட்டு, மேளம் அடித்து கோயிலுக்கு அழைத்துவந்து கொலைக்களத்தில் நிறுத்துவது போல் உள்ளது. திருமலையில் இலங்கை திரும்பும் அகதிகளை வரவேற்பதற்கு நடைபெறும் ஏற்பாடுகளும் அறிவிக்கப்படும் சலுகைகளும் ஆகும்.

ஆனால், இங்குள்ள அகதிமுகாம்களோ கொலைக்களங்களாகவும் மரண வீடுகளாகவும் உள்ளன. அகதிமுகாம்கள்- தடுப்புமுகாம்களில்- உள்ள மக்கள் அடிக்கடி காணாமற் போகின்றார்கள். அகதிமுகாம்களுக்குள் பிரவேசிக்கும், இராணுவத்தினரும், சமூகவிரோத சக்திகளும் தங்கள் இஷ்டத்திற்குஆட்களைக் கைது செய்து செல்கின்றார்கள் கடத்திச்செல்கின்றார்கள். அண்மையிலும் மன்னார் தீவிலுள்ள அகதிமுகாமிலிருந்து ஐந்து தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இதே வேளை போதிய உணவு, நீர், மருந்துவசதிகள் இன்றி அகதி முகாம்களில் உள்ள குழந்தைகள், வயோதிபர்கள் பெரும் நோய்களுக்கும், அதனால் மரணங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். ஆனால், இவற்றைத் தடுக்கவோ அன்றி அதற்குப் பரிகாரங்கள் தேடவோ சிறிலங்கா அரசாங்கம் முனையவில்லை

மேலும், கிழக்கில் தமிழர் மீதான தாக்குதலையும், தமிழர் நிலங்களை ஆக்கிரமிப்பதையும் சிங்கள அரசாங்கம் நிறுத்தியதாகஇல்லை கடந்த வாரமும் இராணுவம் மூதூர் பகுதியில் தமிழர்களை கிராமங்களில் இருந்து அடித்துவிரட்டியதோடு தமிழர் உடைமைகளை ஆக்கிரமித்தும் உள்ளது.

இந் நிலையில் ஏன் இந்த 'வரவேற்புகளும் சலுகைகளும்'? ஆட்டுக்கடாவைப் பலிகொடுத்து ஆண்டவனிடத்தில் வரம் பெறநினைக்கும் பக்தரைப் போல் தமிழர்களைப் பலி கொடுத்து தமது சுமையையும் சர்வதேச உதவியையும் ஒத்தாசையையும் பெறும் நடவடிக்கையே இதுவாகும். அதாவது இந்தியாவைப் பொறுத்தும், சிறிலங்காவைப் பொறுத்தும் அவர்கள் பார்வையில் இலங்கைத் தமிழர்கள் எப்பொழுதும் வேள்விக்கடாக்களாகவே உள்ளனர்.

கொள்ள முடியவில்லை. எனவே, சுமுக சூழலை உருவாக்கும் விசயத்தில் திரு. தொண்டமான் ஒரு நொண்டிச் சாக்கு தலை முன்வைத்து சறுக்க முயன்றார். 11. 11. 1991இல் திரு மகேந்திரராசாவுக்கு எழுதிய பதில் கடிதத்தில்;

''பேச்சு வார்த்தைக்குரிய நல்லதோர் சூழ்நிலை விரைவில் உருவாகும் என ஊகிப்பதற்கு இடமுண்டு. இராணுவ பொருளாதார நெருக்கடியற்ற சுமுக நிலையின் அத்தியாவசியத்தை வலியுறுத்தினீர்கள். நான் அதைக் கருத்தில் கொண்டுள்ளேன். ஆனால் முன்னர் 14 மாதங்களாக யுத்தமற்ற சூழ்நிலை இருந்த போதும், அரசாங்கம் தனது நேசக்கரத்தை நீட்டியிருந்த போதும், பேச்சுவார்த்தைகள் சமாதானத்தில் நிறைவு பெறாத பின்னணியில் போர் நிறுத்தத்தைக் கோருவது சிரமமாகவிருக்கிறது'' எனக் குறிப்பிட்டார்.

## நேசக்கரத்தை நீட்டியது யார்?

விடுதலைப் புலிகள் பிரேமதாசா அரசுடன் 14 மாதங்கள் தொடர்ந்து பேசியும் அந்தப் பேச்சுக்கள் சமாதானத்தில் நிறைவு பெறாதமைக்கு புலிகள் தான் காரணம் என்ற தொனியில் அவரது கருத்து அமைந்தது. இதனை ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக்கி திரு. தொண்டமானுடன் நாம் வாதப் பிரதவாதங்களை

அரசு எந்தவொரு உருப்படியான தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. ஒருபுறம் புலிகளுடன் பேசிக் கொண்டு மறுபுறம் சர்வ கட்சி மாநாட்டை அரங்கேற்றி காலத்தைக் கடத்தமுயன்றது. கொழும்பில் புலிகளோடுநடத்திய பேச்சுக்களில் இனப் பிரச்சினையின் அடிப்படைகள் எதுவும் தொடப்படவில்லை. பிரேமதாசாவுடன் பேசி ஒரு உருப்படியான, நிரந்தரமான தீர்வு எதையும் பெற்றுக் கொள்ள முடியாது என உணர்ந்து கொண்ட நாம், ஒரு இடைக்காலத்தீர்வை விரும்பினோம். அந்த வேளையில் நாம்அரசாங்கத்திடம் இரண்டு கோரிக்கைகளைமட்டும் விடுத்திருந்தோம். ஒன்று, மாகாணசபையைக் கலைத்து விட்டு புதிதாகத் தேர்தலை நடத்துவது, இரண்டாவது, அரசியல் யாப்பின் ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்குவது. இந்த இரண்டு கோரிக்கைகளைக்கூட நிறைவேற்றத் துணிவின்றி பிரேமதாசா காலத்தைக்கடத்தியதோடு சர்வகட்சி மாநாட்டிற்கு முதலுரிமை கொடுத்தார். இது ஒருபுறமிருக்க, ஜே. வி. பி இயக்கத்தை அழித்து விட்ட இறுமாப்பில் சிங்கள இராணுவம் புலிகளுடன் உரசத் தொடங்கியது. இன்னொரு புறத்தில், நாம் ஆயுதங்களை கையளிக்கவேண்டுமென பிரேமதாசாவின் தூண்டுதலின் பேரில் அமைச்சர் ரஞ்சன் விஜயரெத்தினா எம்மீது அழுத்தம்போட்டார். இந்த முரண்பாடுகள் முற்றித்தான் மீண்டும் போர் வெடித்தது. நாம் அன்புக்கரம் நீட்ட அரசாங்கம் அதைப் பற்றிக் கொள்ள வில்லை என்பது தான் உண்மை. பௌத்த காருண்யம் என்ற போர்வைக்குள் துப்பாக்கியை ஒளித்து வைத்திருப்போரிடம் நாம் நீதி

3

ணத்தை வளர்ப்பதோடு பேச்சு வார்த்தைக்குச் சாதகமான நம்பிக்கை நிலைமையையும்ஏற்படுத்தலாம். அடுத்து வரும் காலத்தில் சமாதான நிலைமையை உருவாக்கும் பொறுப்பை நீங்கள் கூடியளவுக்கு மேற்கொண்டால் இதுபோற்றத்தக்க செயலாகும். இப்படி நீங்கள் நடந்து கொண்டால் அரசாங்கமும் அப்படிப்பட்ட நிலையை உருவாக்க வேண்டுமென நான் வற்புறுத்துவேன்'' என்று திரு. தொண்டமான் குறிப்பிட்டிருந்தார்.

இந்த யோசனை எமக்கு ஆக்கபூர்வமானதாகத் தோன்றவில்லை. நடைமுறைச் சாத்தியமானதாகவும் தெரியவில்லை வவுனியா, முல்லைத்தீவு எல்லைப் பகுதியிலும், மன்னார் பிரதேசத்திலும் அரச படைகள் தொடர்ந்து தாக்குதலை நடத்திவருகின்றன. கிழக்கிலும் சண்டை தொடர்கிறது ஆகாயக் குண்டு வீச்சுக்களும் அகோரமாக நிகழ்கிறது. அரச படைகள் மூர்க்கமாக ஆக்கிரமிப்பு யுத்தத்தை தொடர்ந்து நடத்தும்போது நாம் ஆயுதங்களை

நிராகரிக்கவில்லையா? ஆயுதப் படைகள் பகிரங்கமாகவே யுத்தக்தை மீறவில்லையா? அப்பொழுது யுத்த நிறுத்தத்தை நாம் பகிரங்கமாக பிரகடனம் செய்தோம். அதனை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. சமாதானத்திற்கு நாம் விடுத்த சமிக்ஞையை பலவீனத்தின் அறிகுறியாகவே அரசாங்கம் அப்பொழுது தப்புக்கணக்கு போட்டது

திரு தொண்டமான் தெரிவித்த 'பிரகடனப்படுத்தப்படாத போர்நிறுத்தம்' நடைமுறைப்படுத்த முடியாத காரியம். இராணுவ ரீதியில், போர்த்தந்திர அடிப்படையில் இது எமக்கு அனுகூலமானதும் அல்ல, அத்துடன் திரு. தொண்டமானின் யோச

சிக்கலை ... வோம். ஆயினும் அதே வேளை அரச ஆயுதப் படைகளும் இம்முயற்சிக்கு ஒத்துழைப்பு அளித்து பொறுப்புடன் நடந்து கொள்வது சாலச் சிறந்தது. இராணுவ, பொருளாதார அழுத்தங்களைத் தளர்த்தி, சமாதான நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்கி, தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை உண்டுபண்ணும் தார்மீகப் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்திருக்கிறது. புலிகள் இயக்கத்திற்கு நிர்ப்பந்தம் போடுவதாக எண்

**அன்ரன் பாலசிங்கம்**

னையை சிங்கள இராணுவத் தலைமை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதும் எமக்குத் தெரியும். அதற்கான அதிகாரமும் அவரிடம் இல்லை.

### பிரபாகரன் ஏற்கவில்லை

பிரகடனம் செய்யாத போர்நிறுத்த யோசனையை எமது தலைவர் பிரபாகரன் ஏற்றுக்கொள்ளவில்லை. அதுவும் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், ஒரு தரப்பில் ஒரு தலைப்பட்சமாக போர்நிறுத்தம் செய்துகொள்வது நடைமுறைச் சாத்தியமில்லை என்று சொன்னார். போர் ஓய்வுக்கு இரு சாரும் பரஸ்பரம் இணங்கிக் கொள்ள வேண்டும். அந்தப் போர் நிறுத்தம் அதிகாரபூர்வமாக

ணிக் கொண்டு. ஒட்டுமொத்தமாக தமிழ்இனம் மீது தாங்கொணாப் பழுக்களை சுமத்துவது எந்தவகையிலும் நியாயமாகாது என்பதை நீங்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்வீர்கள்.

பிரகடனப்படுத்தப்படாத சண்டையற்ற நிலையிலுள்ள சிக்கல்களைப்பற்றியும், போர் நிறுத்த வழி முறைகள் பற்றியும், பொருளாதார தடை நீக்கம் சம்பந்தமாகவும் ஆரம்ப பேச்சுக்களிலேயே நாம் கருத்துப் பரிமாறிக் கொள்வது அவசியம்..'' எனக் குறிப்பிட்டார்.

(தொடரும்)

## காலை நேர கருத்தரங்கு மாலைக்கு மாற்றம்

வலிகாமம் வடக்கு கடற்றொழில் சங்கங்களின் ஒன்றியத்தின் ஆதரவுடன் இன்று வியாழக்கிழமை காலை பத்து மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த போர்க்காலக் கருத்தரங்கு அதே தினம் மாலை 2·00 மணிக்கு பின்போடப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் நடாத்தப்படவுள்ள இக் கருத்தரங்கில் தொண்டமானாறுதொடக்கம் காரைநகர் வரையுமான சகல கடற்றொழில் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## 160 இலட்சம் பாடப்புத்தகம் அச்சிடப்பட்டது

இலவச பாடப்புத்தக விநியோகத்திற்காக 1980ஆம் ஆண்டில் இருந்து இதுவரை முந்நூறு கோடி ரூபாவினை செலவிட்டுள்ளது என கல்விச் சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

1992ஆம் ஆண்டிற்கான பாடப்புத்தகங்கள் 160லட்சம் அச்சடிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா - ரஷ்யா பரஸ்பர ஒத்துழைப்பு

(டில்லி)

இந்தியாவும் ரஷ்யாவும் பரஸ்பரம் ஒன்றுக் கொன்று தேசிய பாதுகாப்பை பாதிக்கும் விதத்திலான எந்த விதமான நடவடிக்கையிலும் ஈடுபடாமல் இருக்க கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளன என்று இந்திய உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வரும் மார்ச் மாதம் இந்தியா வரவிருக்கும் ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் நட்புறவு ஒத்துழைப்பிற்கான புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்ஷிட் தலைமையிலான இந்தியக் குழுவொன்று அண்மையில் மொஸ்கோ சென்றிருந்த போது இந்த உடன்படிக்கை இறுதி முடிவெடுக்கப்பட்டது என்றும்,

1971 ஆம் ஆண்டு இந்திய - சோவியத் நட்புறவு உடன்படிக்கையின் சில முக்கிய அம்சங்கள் இந்தப் புதிய ஒப்பந்தத்தில் இருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சிரமதானம்

[யாழ்ப்பாணம்]

மிட்ரவுண் றோட்டறிக் கிளப் அங்கத்தவர்கள் யாழ். மாநகரசபையின் ஒத்துழைப்புடன் வீதிபுனரமைப்பு வேலையில்ஈடுபட்டனர்கடந்த 17ஆம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரையும் அம்மன் வீதி.வாய்க்கால்கள் என்பன புனரமைப்பு செய்து சுத்தம் செய்யப்பட்டன

### இடைக்கால நடுவர் மன்ற

## தீர்ப்பை அமுலாக்க கோரி தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக இடைக்கால நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பை உடனடியாக அமுல் படுத்தக்கோரி மத்திய அரசு அலுவலகங்களின் முன்பாக நேற்றுமுன்தினம் தமிழகத்தில் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன. திராவிடர் கழகத்தினால் ஒழுங்கு படுத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டமைக்காக திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் இ. வீரமணி உட்பட ஆயிரத்து முந்நூறு பேர் பொலிஸ் சாரரால் கைது செய்யப்பட்டிருப்பதாக தமிழக காவல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## 'டடா' சட்ட பிரயோகம் விவாதிக்க வேண்டும்

### ஜனதாதளம் கோரிக்கை

தமிழகத்தில் 'டடா'ச் சட்டத்தை பயன்படுத்துவது பற்றி விவாதிக்க மாநில அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டவேண்டுமென ஜனதாதளின் தமிழ் நாடு கிளை கேட்டுக் கொண்டிருக்கிறது.

புதுக்கோட்டையில் கடந்த ஞாயிற்றுக்கிழமைஇடம் பெற்ற இக்கட்சியின்நிர்வாகக்குழுக் கூட்டத்தில் இந்த வேண்டுகோள்விடப்பட்டுள்ளது.

மாநிலத் தலைவர் சிவாஜி கணேசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இது குறித்த தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது. மாநிலத்தில் இந்தச் சட்டம் அரசியல் நோக்குடன் தவறாக பயன்படுத்தப்படுவதாக கூறுகிறது.

## பஞ்சாப்பில் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படமாட்டாது

பஞ்சாப் மாநிலத்தில் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படமாட்டாது என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சவான், பஞ்சாப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஒன்றை ஆட்சியில் அமர்த்துவதற்கான தேர்தல் பணியில் ஒத்துழைக்குமாறு அனைத்து அரசியல்கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈழநாதம்

# திறந்தவெளி கைதிகளாக நெடுந்தீவு மக்கள் அவதி

## யாழ். திரும்பியவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

'திறந்த வெளிக்கைதிகளாக நெடுந்தீவுமக்கள் அல்லற்பட்டு வருகின்றனர். கடந்த வருடம் இறுதிப்பகுதியில் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் இப்பகுதி மக்கள் வாழ்க்கையைத் தொடர்ந்தனர்' இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன்நெடுந்தீவிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் திரும்பியவயோதிபர் ஒருவர் தெரிவித்தார். எட்டு சிறுவர்கள் உட்பட மொத்தம் 26 நெடுந்தீவு மக்கள் இவ்வாறு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

மருத்துவ வசதி, உணவு, குடிநீர், பணப்புழக்கம் போன்ற அத்தியாவசிய தேவைகள் எதுவும் இல்லாத நிலையில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் சமூகவிரோதக் கும்பல்களினது செயல்களாலும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பாடசாலை மாணவர்கள் சிலர் இச்சமூக விரோதிகளால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். மருத்துவ வசதி அற்ற காரணத்தால் சிலர் மரணமடைந்திருககின்றனர்.

இவ்வருட ஆரம்பத்தில் இருந்து உணவுப் பொருள்கள் ஓரளவு கிடைக்கின்றது. எனினும் இப்பகுதியில் முகாமிட்டிருக்கும் சமூகவிரோதிகளது தொல்லைகள் தொடர்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மீண்டும் இம்மாத இறுதியில் தீவுப்பகுதிக்கு சென்று யாழ்ப்பாணம் வரவிரும்பும் மக்களை அழைத்து வருவதற்கு திட்டமிட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (க), (75)

## தீவகமக்கள் தென்மராட்சியில் குடியமர்வு

(புங்குடுதீவு)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணததில் கல்லூரிகளில் தங்கியிருந்த தீவக மக்களில் பெரும்பாலானவர்கள் தற்போது கிளாலி, கெற்பலி ஆகிய இடங்களில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். சொந்த விருப்பத்தின் பேரில் மேற்படி இடங்களில் குடியமர்த்தப்படும் மக்களை விட அப்பகுதிகளுக்கு செல்ல விரும்பாதவர்கள் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் உறவினர் வீடுகளிலும், மற்றும் வாடகைக்கு வீடுகள் எடுத்தும் குடியமர்ந்து வருகின்றனர். இதனால் கல்லூரிகளில் தற்போது மக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. (22)

# உங்களை நீங்கள் ஆள தயார்படுத்தி கொள்ளுங்கள்

## தோட்டத் தொழிலாளர் மத்தியில் தொண்டா

(அட்டன்)

மாலைதீவில் இரண்டரை லட்சம் மக்களே உள்ளனர். அவர்களுக்கென ஒரு அரசாங்கம் உள்ளது. நுவரெலியா-அம்பேகமுவ பிரதேச சபைகளில் சுமார் நாலு லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இரண்டரை லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட மாலைதீவுக்கு ஒரு அரசாங்கம் உண்டு. நாலு லட்சம் மக்கள் தொகை கொண்ட உங்களுக்கு இரு சபைகள் உண்டு. இதன் மூலம் உங்களை நீங்களே ஆள உங்களைத் தயார் படுத்திக் கொள்ளுங்கள். இவ்வாறு அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டியாகலைப் பகுதியில் நடைபெற்ற ஆலய கும்பாபிஷேக நிகழ்ச்சியில் கலந்து கொண்டபின் பொதுக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், இந்த நாட்டின் வளத்துக்காகவும், உயர்வுக்காகவும் உழைத்துக் கொண்டிருப்பவர்கள் மலையக மக்கள். ஆனால் ஆண்டு அனுபவிப்பவர்கள் மற்றவர்கள்இந்நிலை தொடர்ந்து நீடிக்கக்கூடாது. உழைக்கும் நீங்கள் தான் அனுபவிக்கவேண்டும், ஆள வேண்டும். அதற்காக ஆரம்ப வேலைகளை நுவரெலியா-அம்பேகமுவ பிரதேசசபைகள் மூலம் செய்துள்ளோம். அதனை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுவது உங்கள் கடமை யாகும் எனவும் குறிப்பிட்டார்.

## செஞ்சிலுவையின் விசேட கூட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் அங்கத்தவர்களுக்கான விசேட கூட்டமொன்று எதிர்வரும் இருபத்தாறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 'அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பது எப்படி' என்பது பற்றி இக்கூட்டத்தில்விரிவாக ஆராயப்படவுள்ளது.

# பதுளையில் தீவிர தேடுதல்; வெளியிடத்தோர் பலர் கைது

(பதுளை)

பதுளை மாவட்டத்தில் பொலிஸார் நடத்திய பாரிய தேடுதல் வேட்டையில் சுமார் 58 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கடந்த வாரம் பதுளைமாவட்டம்முழுவதிலும் இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

600 பொலிஸாரும் மற்றும் விசேட அதிரடிப்படையினரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்களில் சிலர் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு பகுதிகளைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் மலைநாட்டுத் தமிழ் இளைஞர்கள் என்று தெரிவிக்கப் படுகிறது,

பதுளை எலா பொலிஸ் பிரிவில் தோட்டத் தொழிலாளரின் சம்பளம் கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கையாகும்.

பதுளையிலிருந்து நடைபாதைகள், காட்டுப்பாதைகள்வழியாக எவரும் தப்பித்து மொனராகலையைச் சென்றடையாமல் தடுக்க, பொலிஸர் 21 சோதனை முகாம்களை எலாவில் ஹெண்டகல பகுதியில் அமைத்திருந்தனர்.

## சிறிலங்காவிற்கு உதவி வழங்கும்

# 14 நாடுகளின் தூதுவர்கள் வவுனியா விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் பதினான்கு நாடுகளின் தூதுவர்கள் நேற்று முன்தினம் வவுனியாவிற்கு விஜயம்செய்து அகதிமுகாம்களை பார்வையிட்டதோடு பிரஜைகள் குழுவினர் ஆகியோரை சந்தித்து உரையாடினர் என கொழும்புச்செய்திகள்தெரிவிக்கின்றன

இச் சந்திப்பின் போது சிறிலங்கா இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகளும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குண்டு வெடிப்பால் சிதைந்த

# சீனன்குடா படைத்தளத்தை விஜயதுங்கா பார்த்தார்

(கொழும்பு)

திருக்கோணமலை சீனன் குடாவில் நிகழ்ந்த பாரிய குண்டுவெடிப்பு சம்பவத்தை சிறிலங்கா பிரதமரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா நேற்றுக் காலை சென்று பார்வையிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது-

அங்கு ஏற்பட்ட சேதங்களை பார்வையிட்ட பின்னர் காயமடைந்த விமானப்படை வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை பற்றி விசாரித்தார் என்றும்,

விமானப்படை ஆதார வைத்தியசாலையில் காயமடைந்த பல விமானப்படை வீரர்களுடனும் இவர் உரையாடினார் என்றும்,

நிவாரண நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# 'பயங்கரவாதத்தை' ஒடுக்க சர்வதேச நடவடிக்கை

## இந்தியா கோரிக்கை

(டில்லி)

சர்வதேச அளவில் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்க ஒருங்கிணைந்த முயற்சி மேற்கொள்ள வேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளது. சர்வதேசசட்டத்துக்குட்பட்டு இப் பிரச்சினையை அணுக வேண்டுமென ஐ.நா பாதுகாப்புச் சபையை இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது. இந்தியாவின் இந்நிலையை வற்புறுத்தி ஐ நா. பாதுகாப்புச் சபையில் பேசிய இந்தியப் பிரதிநிதி கடேகான் மேலும் கூறுகையில், பயங்கரவாதிகளுக்கு உலகில் எங்கும் புகலிடம் இருக்காது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளும் அளவுக்கு தீவிர நடவடிக்கைகளை ஐ நா. பாதுகாப்புச் சபை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

# எயர் லங்கா சேவை 12 இடங்களுக்கு விஸ்தரிப்பு

(கொழும்பு)

எயர்லங்கா நிறுவனம்தனது சர்வதேச விமான சேவையை மேலும் பன்னிரண்டு புதிய இடங்களுக்கு விஸ்தரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

ஐரோப்பா தூரகிழக்கு உல்லாசப் பயணிகளின் போக்குவரத்து அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தேஎயர்லங்காஇந்த நடவடிக்கையைமேற்கொள்ள இருக்கிறது.

டென்மார்க், சுவீடன், ஸ்பெயின், நியூசிலந்து, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், கொரியா, தாய்வான், நேபாளம், ஜோர்டான், லெபனான், கென்யா ஆகிய பன்னிரண்டு நாடுகளுக்கும் தனதுசர்வதேச விமான சேவைகளை விஸ்தரிப்பது பற்றி ஆராய்ந்து வருகின்றது என்றும் தெரிவிக்கப் படுகிறது.

## தமிழ்நாடு மதுராந்தகம்

# சிறைச்சாலையிலிருந்து 8 இல. தமிழர் தப்பி ஓட்டம்

மதுராந்தகம் உப சிறைச்சாலையில் இருந்து எட்டு இலங்கைத்தமிழர்கள் தப்பியோடி விட்டனர் என தமிழக காவல் துறை தெரிவித்துள்ளது.

இவர்கள் ஜன்னல் ஒன்றின் கம்பியை வெட்டி படுக்கை விரிப்புகளின்துணையோடு சுவரேறிக் குதித்து தப்பிச் சென்றுள்ளனர் என்றும்-

கடந்தவெள்ளிக்கிழமை இச் சம்பவம் நடைபெற்றதாகவும் தமிழக காவல்துறை அறிவித்துள்ளது.

## இமெல்டா மீது 58 வழக்குகள்

பிலிப்பைன்சின் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோசின் மனைவி இமெல்டாவுக்கு எதிராக புதிதாக நான்கு லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு வழக்குகளை அந்த நாட்டு அரசு நேற்றுத் தாக்கல் செய்துள்ளது.

இவற்றையும் சேர்த்து திருமதி இமெல்டா மார்க்கோவிற்கு எதிராக வழக்குகளின் எண்ணிக்கை 58 ஆக உயர்ந்துள்ளன.

சுமார் 20 கோடி 50 லட்சம் டாலர் தொகைக்கு வருமான வரி மற்றும் குடும்பச் சொத்து வரியை அவர் கட்டுவதற்கு தவறிவிட்டது தொடர்பான 7 வழக்குகள் ...

## நிரந்தர

...டக் கல்வி அதிகாரிகளின் விதப்புரையுடன் அடுத்த மாதம் 1ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு அவர் கோரியுள்ளார்.

இப் பெயர்ப் பட்டியல்கள் ஒவ்வொரு கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் விளம்பரப் பலகையில் ஒட்டப்பட வேண்...

# பிணையில் செல்வதற்கு நாகராஜனுக்கு அனுமதி

## வல்வெட்டித்துறை குண்டு வீச்சு;

# ஓராண்டு நிறைவையொட்டி மாபெரும் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அறிவியல்...

படையினர் அகோரக் குண்டு...

# எயர் லங்கா சேவை
# 12 இடங்களுக்கு விஸ்தரிப்பு

(கொழும்பு)

எயர்லங்கா நிறுவனம் தனது சர்வதேச விமான சேவையை மேலும் பன்னிரண்டு புதிய இடங்களுக்கு விஸ்தரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

ஐரோப்பா தூரகிழக்கு உல்லாசப் பயணிகளின் போக்குவரத்து அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தேஎயர்லங்காஇந்த நடவடிக்கையைமேற்கொள்ள இருக்கிறது.

டென்மார்க், சுவீடன், ஸ்பெயின், நியூசிலந்து, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், கொரியா, தாய்வான், நேபாளம், ஜோர்டான், லெபனான், கென்யா ஆகிய பன்னிரண்டு நாடுகளுக்கும் தனதுசர்வதேச விமான சேவைகளை விஸ்தரிப்பது பற்றி ஆராய்ந்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

## நிரந்தர

டக் கல்வி அதிகாரிகளின் விதப்புரையுடன் அடுத்த மாதம் 1ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு அவர் கோரியுள்ளார்.

இப் பெயர்ப் பட்டியல்கள் ஒவ்வொரு கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் விளம்பரப் பலகையில் ஒட்டப்பட வேண்டும் என்றும், இப் பெயர்கள் பற்றி ஐயங்கள், ஆட்சேபங்கள்இருந்தால்பதிவுத்தபாலில் இந்த மாதமுடிவுக்குள்தமக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். அநாமதேயக் கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என்றும், பதிவுத் தபாலில் முறைப்பாடு செய்பவர்கள் விசாரணைக்கு அழைக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## வடபகுதி

சுழு விஜயம் செய்தது. இதே வேளை காரைநகர் கடற்படை முகாம் மேலும் பலப்படுத்தப் பட்டுள்ளது. வடபகுதியின் மீது நடவடிக்கையில் இறங்கும் வகையில் காரை நகர் முகாம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பிணையில் செல்வதற்கு நாகராஜனுக்கு அனுமதி

(சென்னை)

டடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் காவலில்வைக்கப்பட்டிருந்த முன்னாள் உள்துறைச் செயலர் ஆர். நாகாராஜன் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

ஆர். நாகராஜன் சென்னை பெருநகர் நீதிபதி முன் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆஜராக வேண்டும் என்றும், 25,000 ரூபா சொந்தப் பிணை கொடுக்க வேண்டும் என்றும், இரண்டு பேர் இதே தொகைக்குப் பிணை எழுதிக் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலேயே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

உடல்நலக்குறைவு காரணமாகவே நாகராஜன் பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டார்.

---

## சுதந்திரக்கட்சி

பதவியை அதன் தேசியஅமைப்பாளரான அநுரா பண்டாரநாயக்காவிடம் கையளிக்க மறுத்துள்ள அதே நேரம், பாராளுமன்ற விவகாரங்களை கவனிக்க மட்டும் அவருக்கு அனுமதியளித்துள்ளார்.


புதிய பிரிவு

## கணக்கியல்

திரு. S. K. பிரபாகரன்

A/L 93 செவ்வாய் - வியாழன் 3 - 4

A/L 92 செவ்வாய் - வியாழன் 4 - 5

## யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(சி 3820)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


(டில்லி)

சர்வதேச அளவில் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்க ஒருங்கிணைந்த முயற்சி மேற்கொள்ள வேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளது. சர்வதேசசட்டத்துக்குட்பட்டு இப் பிரச்சினையை அணுக வேண்டுமென ஐ. நா பாதுகாப்புச் சபையை இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது. இந்தியாவின் இந்நிலையை வற்புறுத்தி ஐ நா. பாதுகாப்புச் சபையில் பேசிய இந்தியப் பிரதிநிதி கடேகான் மேலும் கூறுகையில், பயங்கரவாதிகளுக்கு உலகில் எங்கும் புகலிடம் இருக்காது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளும் அளவுக்கு தீவிர நடவடிக்கைகளை ஐ நா. பாதுகாப்புச் சபை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

---

## உடுகம்பொல

தெடுக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பதவியை முன்னர் பிரேமதாசா உடுகம்பொல வகித்ததும் அவர் தற்போது கட்டாய லீவில் அனுப்பப் பட்டுள்ளதும் தெரிந்ததே-

சர்ச்சைக்குரிய இப்பதவிச்கு கடந்த திங்கள் இவர் நியமிக்கப்பட்டார்.

---

## உண்ணாவிரதம்

பேரும் தமது உண்ணாவிரதத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இவர்கள் தமது உறவினரைச் சந்திக்கவும், சிறைகளில் மேலும் சில வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து உண்ணாவிரதத்தைத்தற்காலிகமாகக் கைவிட்டதாகத் தெரிய வருகிறது.

---

## மாமடு

- ★ நடுத்தர ரவைகள் -227
- ★ நேற்றோரவைகள் -20
- ★ ஜே. ஆர். கைக்குண்டு -1
- ★ ஜி3 ஏ3 ரக மகசீன் -1
- ★ ரி8 ரக மகசீன் -15
- ★ ரி56 ரக ரக மகசீன் -3
- ★ ஏ. கே. கோல்சர் -1
- ★ தலைக்கவசம் -2
- ★ தொப்பி -2

---

## கணேசபுரத்தில்

- ★ ஏ. கே. எல். எம். ஜி. ரம்மகசீன்- 01
- ★ ரி- 56 மகசீன் - 22
- ★ ஐ எம். ரவைகள் -330
- ★ ஜே. ஆர். கிரெனெட் - 04
- ★ சூ - 5 சோடி

உட்பட மேலும் சில இராணுவ பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

## இந்தியா கோரிக்கை

---

## தமிழ்நாடு மதுராந்தகம்

# சிறைச்சாலையிலிருந்து 8 இல. தமிழர் தப்பி ஓட்டம்

மதுராந்தகம் உப சிறைச்சாலையில் இருந்து எட்டு இலங்கைத்தமிழர்கள் தப்பியோடி விட்டனர் என தமிழக காவல் துறை தெரிவித்துள்ளது.

இவர்கள் ஜன்னல் ஒன்றின் கம்பியை வெட்டி படுக்கை விரிப்புகளின்துணையோடு சுவரேறிக் குதித்து தப்பிச் சென்றுள்ளனர் என்றும்-

கடந்தவெள்ளிக்கிழமை இச்சம்பவம் நடைபெற்றதாகவும் தமிழக காவல்துறை அறிவித்துள்ளது.

## அறிவியல் கருத்தரங்கு

இன்று நண்பகல்12-00 மணிக்கு மனித உரிமை என்றால் என்ன? என்பது பற்றிய அறிவியல் கருத்தரங்கு யா. பல்கலைக்கழக விரிவுரையாளர் இரகுநாதன்அவர்களால்வட்டு திருஞானசம்பந்தர் வித்தியா சாலையில்நடத்தப்படவுள்ளது

## முதல்

வெளியில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்என்றும்-

இவர்களுக்கென விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை புனர்வாழ்வு அமைச்சர் பி. தயாரத்தினா, ராஜாங்க அமைச்சர் சமந்தா கருணாரத்தினா,செயலாளர், கூட்டுப்படை தலைமை அலுவலகத்தின் தளபதி ஹமில்டன் வனசிங்கா மற்றும் பலர் வரவேற்றனர்.

---

## விமானப்

இவ்வெடிவிபத்தைத் தொடர்ந்து பலகோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் சேர்க்கப்பட்டிருந்த களஞ்சியம் இருந்த இடத்தில் பாரிய கிடங்கு ஒன்றே காணப்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

---

## சடலங்களை

எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு, காயமடைந்தவர்களின் தொகை நூற்றையும் தாண்டிவிட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இதில்பலர் கவலைக்கிடமாகவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

---

## யாழ்ப்பாணம்

சினை தொடர்பாக புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தும் முயற்சியை தான் இன்னமும் கைவிடவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கையாகும்.

பதுளையிலிருந்து நடைபாதைகள், காட்டுப்பாதை கள்வழியாக எவரும் தப்பித்து

## வல்வெட்டித்துறை குண்டு வீச்சு;

# ஓராண்டு நிறைவையொட்டி மாபெரும் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப் பகுதியில் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் சிறிலங்கா விமானப் படையினர் அகோரக் குண்டு வீச்சு நடத்திய தாக்குதலின் ஓராண்டு நிறைவு நாளை மறுதினமாகும். இதையொட்டி வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோயிலடியில் பிரமாண்டமான பொதுக் கூட்டமொன்றை நடத்க மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவினர்ஏற்பாடு செய்துள்ளனர். இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள்பலர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

---

## கல்வி அபிவிருத்தி கழகக் கூட்டம்

தென்மராட்சிக் கல்விக் கோட்ட கொத்தணிப்பாடசாலை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாக அங்கத்தவர்களுக்கான அவசர கூட்டம் நாளை 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது. சகலரும் தவறாது கலந்துகொள்ளும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

---

## வீரச்சாவு

ளரான இராசா (கருவேப்பங்கேணி) என்பவரும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் தெரிவித்துள்ளனர்.

---

## 20 கட்டடங்கள்

டங்கள் தரைமட்டமாகியதாக ஏஜென்சி செய்திகள் குறிப்பிட்டன.

விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகப்டர்கள், விமானங்கள் என்பவற்றிற்கும் பலத்த சேதமேற்பட்டதை நேற்றைய ரூபவாகினி படம் பிடித்துக் காட்டியது. சேதமடைந்த நிலையில் ஹெலிகப்டர்களும் சிறகுகள் முறிந்த நிலையில் விமானங்களும் காணப்பட்டன.

சேதமாகிய கட்டடங்களில், விமானங்கள், ஹெலிகப்டர்கள் பழுதுபார்க்கும் இடங்கள், தரித்துவைக்கும் இடங்கள், காரியாலயங்கள் என்பனவும் சேதமாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விமானப்படைக்குரிய பல்வேறு ஆவணங்களும் சேதமடைந்ததாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

குண்டு வெடிப்பு சம்பவத்தை சிறிலங்கா பிரதமரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா நேற்றுக் காலை சென்று பார்வையிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது-

அங்கு ஏற்பட்ட சேதங்களை பார்வையிட்ட பின்னர் காயமடைந்த விமானப்படை வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை பற்றி விசாரித்தார் என்றும்,

விமானப்படை ஆதார வைத்தியசாலையில் காயமடைந்த பல விமானப்படை

உடனடியாக மேற்கொள்ளுமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

## இமெல்டா மீது 58 வழக்குகள்

பிலிப்பைன்சின் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோசின் மனைவி இமெல்டாவுக்கு எதிராக புதிதாக நான்கு லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு வழக்குகளை அந்த நாட்டு அரசு நேற்றுத் தாக்கல் செய்துள்ளது.

இவற்றையும் சேர்த்து திருமதி இமெல்டா மார்க்கோவிற்கு எதிராக வழக்குகளின் எண்ணிக்கை 58 ஆக உயர்ந்துள்ளன.

சுமார் 20 கோடி 50 லட்சம் டாலர் தொகைக்கு வருமான வரி மற்றும் குடும்பச் சொத்து வரியை அவர் கட்டுவதற்கு தவறிவிட்டது தொடர்பான 7 வழக்குகள் இப்போது விசாரிக்கப்பட்டு வருகின்றன.

---

## உபகரணங்கள் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

காரைநகர்ப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து சுளிபுரத்தில் தஞ்சமடைந்துள்ள அகதிக் குடும்பப்பிள்ளைகளுக்கு 15,000 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை ''போரூட்'' நிறுவனம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.(24)

## மரண அறிவித்தல்

### செல்வி சிவநந்தினி சிவயோகநாதன் (சிவா)

[வட, இந்து மகளிர் கல்லூரி, ஆண்டு 8 மாணவி]

துன்னாலை தெற்கு செல்வி சிவநந்தினி (சிவா) சிவயோகநாதன் (1992 - 01 - 22) புதன்கிழமை நேற்று காலமானார்.

இவர் கந்தசாமி சிவயோகநாதன் (தெ.ப.உ.வி.கூ. சங்கம், கிளிநொச்சி), பத்மா தம்பதிகளின் அன்புமகளும் திரு. மு. செல்லப்பாக்கியம் (ஓய்வு பெற்ற அதிபர்), யோகம்மா, காலஞ்சென்ற இ. கந்தசாமி, நாகமுத்து, செ. கணேசன் (ஆசிரியர்), திருமதி சி. சோதிமுத்து ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விமலநாதன் (U.K) அவர்களின் ஆசை மருமகளும், கருணாவதி (கச்சேரி, முல்லைத்தீவு), மதனாவதி (சுவிஸ்), சுலோசனா(U.K) காஞ்சனா, கிருபநாயகி, செல்வநாயகி, க. கமலநாதன், சி. இராஜேந்திரநாதன் (சுவிஸ்), கி. பகீரதன் ஆகியோரின் அன்புப் பெறாமகளும், தயாளினியின் அன்புத் தங்கையும், சுஜந்தன், சுபாஜினி, மயூரன், ராகவராம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 1992 - 01 - 23 ஆம் திகதி (இன்று) வியாழக்கிழமை பகல் 12.00 மணிக்கு வேரோண்டை மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

செல்ல மஹால்,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

தகவல்:
மு. செல்லப்பாக்கியம்

[2133]